சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

வ.ம.எண்.05/2025, வ.ம.எண்.06/2025, வ.ம.எண்.07/2025 இன் ஓ.எஸ். 87/2022

மோகன் ... மனுதாரர்/2–ம் பிரதிவாதி

/எதிர்/

வளர்மதி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுக்கள் 21.01.2026–ம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

பொதுவான உத்தரவு

இம்மனுக்கள், அசல் வழக்கில் கடந்த 03.09.2025–தேதியில் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியத்தை 2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக Reopen செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், அசல் வழக்கில் கடந்த 03.09.2025–தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், மனுதாரர் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக அவரை (Recall) செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், பிரிவு 151, கட்டளை 9, விதி 7 மற்றும்கட்டளை 18 விதி 17–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. <u>2–மனுக்களின் சுருக்கம்.</u>

மனுதாரர், மேற்படி மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி. அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது கடந்த 03.09.2025–தேதியில் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினத்தில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. அதோடு மனுதாரருக்கு வாய்தா தேதியும் தெரியவில்லை. அதனால், மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து குறுக்கு விசாரணை செய்ய தயார்படுத்த இயலவில்லை. இரண்ட நாட்கள் கழித்து தான் மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து, ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சங்கதி தெரிய வந்தது. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு மேல்சொன்ன காரணமே தவிர வேறு ஒன்றுமில்லை. மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு நீக்கரவு செய்யக்கோரியும், வாதி தரப்பு சாட்சியத்தை reopen செய்யவும் மனுத்தாக்கல் செய்துள்ளார். மனுதாரர், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டதை reopen செய்யவும், வாதியை, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அவரை Recall செய்யவும், ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவும் வேண்டியது அவசியமாகிறது. ரத்து செய்யாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த பாதிப்பு ஏற்படும். மேற்படி உத்தரவு பிறப்பிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. ஆகையால், அசல் வழக்கில் கடந்த 03.09.2025–தேதியில் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியத்தை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக Reopen செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், அசல் வழக்கில் கடந்த 03.09.2025–தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், மனுதாரர் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக அவரை (Recall) செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. இ.ம.எண்.5/2025–மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை, இ.ம.எண்.6/2025 மற்றும் இ.ம.எண்.7/2025–மனுவின் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைச்சுருக்கம்,

மனுதாரர் மனு பொய்யும், மோடியுமானது. சட்டப்படிக்கும். நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கதாகும். இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத்தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுச்சங்கதிகள் உண்மையில்லை. மேற்படி தாவாவில் நல்ல கட்சி இல்லாததால் மனுதாரர் இது போன்று மனுவை தாக்கல் செய்து வீண் காலதாமதம் செய்து வருகிறார். மனுதாரர் அவரது அபிடவிட்டில் கடந்த 03.09.2025–தேதிய்னுறு அவருக்கு உடல்நிலை சரியில்லை என சொல்லியுள்ளாரே தவிர மேற்படி உடல்நிலை சரியில்லாததற்கு இம்மனுவுடன் மருத்துவ சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே பொய்யான காரணங்களைக்கூறி, மனுதாரர் இது போன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இம்மனுக்களை இந்த எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாறு ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடவில்லை.

5. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்று, இம்மனுக்கள் அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்.

## தீர்வு

6. இரு தரப்பு ஆவணங்களும், வாதங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

7. மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை, உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில், வா.சா.1–ஐ இம்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால், அவருக்கு எதிராக கடந்த 03.09.2025–தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வா.சா.1–சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் அசல் வழக்கில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று கோரியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா இடப்பட்டுள்ள அசல் வழக்கை மறுதிறப்பு செய்து, வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக அவரை மீண்டும் வரவழைக்கவேண்டும் என்று கோரி இம்மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

8. மேற்படி வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாததற்கு காரணமாக, மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்று கூறியுள்ளார். ஆனால், மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து, சிகிச்சை பெற்றார் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனினும், அசல் வழக்கு தற்போது வரை இறுதியாக தீர்ப்பு பிறப்பிக்காமல் நிலுவையில் உள்ளது. மேலும், அசல் வழக்கில் இரு தரப்பினருக்கும் உரிய வாய்ப்பளித்து வழக்கை முடிவு செய்தால் தான் அது இறுதியானதாக இருக்கும். அதனால், வா.சா.1–ஐ உரிய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்யாமல் அசல் வழக்கை மனுதாரர் காலதாமதம் செய்துள்ளதால், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட சிரமத்தை ஈடு செய்யும் வகையில், இம்மனுக்களை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் செலவுத்தொகையாக மொத்தம் ரூ. 1,000/–த்தை எதிர்மனு தாரருக்கு 05.02.2026–தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் ஐ.எ.எண்கள். 5/2025, IA.6/2025, 7/2025–ஆகிய இம்மனுக்கள் அனுமதிக்கப்படும், தவறும்பட்சத்தில் இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா 05.02.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ம் நாள் அவையறியத் தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2026.01.23 16:14:06 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்</u>
இல்லை.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2026.01.23 16:14:06 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.